செய்தி வெளியீடு எண்: 377 நாள் :22.07.2016

# செய்தி வெளியீடு

தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதில், தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பு, திருமந்திரமும் வாழ்வியலும் மற்றும் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்புகள் இந்நிறுவனத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப் பெற்று வருகின்றன. அந்த வகையில் 2016–17ஆம் கல்வியாண்டிற்கான தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்புக்கான மாணவர் சேர்க்கை தொடர்பாக கீழ்க்காணும் செய்தியை தமிழ் (ம) ஆங்கில நாளிதழ்களில் வெளியிட ஏற்பாடு செய்துதவக் கனிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

"உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் முழுநேர தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றது. அந்தவகையில் 2016–17ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பெறுகின்றன. விண்ணப்பங்களை சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நேரிலோ, அஞ்சலிலோ அல்லது நிறுவன வலைத்தளத்தில் (www.ulakaththamizh.org) பதிவிறக்கம் செய்தோ பெற்றுக் கொள்ளலாம். கட்டண விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் (நுழைவுத் தேர்வு கட்டணம் சேர்த்து) (எஸ்.சி/எஸ்.டி. மாணவர்களுக்கு சாதிச்சான்று வழங்கும் நிலையில் ரூ. 200) | – | ரூ. 300/– |
| தமிழ் ஆய்வியல் நிறைஞர் வகுப்பு கல்விக் கட்டணம் | – | ரூ. 4,500/– |
| விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | – | 12.08.2016 |
| நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள் | – | 18.08.2016 |
| வகுப்பு தொடங்கப்பெறும் நாள் | – | 24.08.2016 |

மேலும் விவரங்களுக்கு இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி அஞ்சல், சென்னை – 600 113, பேசி : 044–22542992 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**